ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2314/87 - 2023 ජනවාරි මස 14 වැනි සෙනසුරාදා - 2023.01.14

2314/87 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MAT/LND/LA/4/1569.
காணி அமைச்சின் இல.: 4-3/15/2017/VE/410.

2022.09.09 ஆந் திகதிய இல. 2296/29 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் என்னால் விடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கையேற்கும் திகதி 2023.04.26 ஆகவும் மற்றும் உரிமை கோரல் பரிசீலனை நடைபெறும் திகதி 2023.05.10 ஆகவும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

எல். கே. மதுச சங்கள்ப,
பிரதேச செயலாளர்,
மத்துகம.

EOG 01 - 0135

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ஜீஓடீஎஸ்/எல்.என்.டீ/05/ஏ.சீ.கியூ/43.
காணி அமைச்சின் இல.: 4-3/8/2018/பீசி/209.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொடக்கவலை பிரதேசத்தில் இறக்குவானை நகர கிராம அலுவலர் பிரிவில், இறக்குவானை கிராமத்தில் அமைந்துள்ள சர்வே ஜனராலுக்குப் பதிலாக இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட அளவையாளரினால்

வரையப்பட்ட இறுதிக் காணித் திட்ட இல. 699 இல் மேலதிக இல. 14 மற்றும் தாள் இல. 14 மற்றும் 2022.10.18 ஆந் திகதி கொண்ட திட்டத்தின் துண்டு இல. 881 எனக் காட்டுகின்ற 0.1265 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 881**

காணியின் பெயர்: டெல்வின் தோட்டம், ஒரேன்ஜ் பீல்ட் தோட்டம்; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், 5 வருடங்கள் பழைமை வாய்ந்த மரங்கள் மற்றும் நிலையான கட்டிடத்தின் பகுதி உண்டு; உரிமை கோருவோர்: மொஹமட் சஹீட் மொஹொமட் ஹாரிஸ் மற்றும் மொஹமட் ஸெரீப், மொஹொமட் இயாஸ்; விஸ்தீரணம்: 0.1265 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கொடக்கவலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒப்பு மற்றும் ஏனைய ஆவணங்கள் குறித்த பரிசோதனையின் போது முன்வைக்க வேண்டும்.

ஜீ. எல். டப். ஏ. பிரதிபா,
பிரதேச செயலாளர்,
கொடக்காவல.

பிரதேச செயலகம்,
கொடக்காவல.
2023, சனவரி 02.

EOG 01 - 0137